ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்ய தர்மம்.

सन्देहस्थानसम्बन्धात् गुणवानपि दूष्यते ।
'रात्रौ वल्मीकसम्बन्धात् रज्जुस्सर्पायते खलु ॥

நற்குணம் பொருந்தியவனாயிருப்பினும், தீய ஒழுக்கத்தை யுடையவர்களுடன் பழக்க மிருப்பின், அதனால் அவனும் பிறரால் தூஷிக்கப்படுவான். அஃதெங்ஙனமெனில்; புற்றின் மேல் கயிறு கிடந்தாலும் இரவில் அதைப் பார்ப்போர்கள் எப்படி அரவமெனக்கருதி அஞ்சு வார்களோ, அங்ஙனமேயாம்.

நாம் ஒருவனை உற்ற நண்பனெனக்கருதிநீண்டகாலம் அவனுடன் பழகியகாரணத்தால், நமக்கு அதிகமான அபிமானம் அவனிடத்தில் ஏற்பட்டிருப்பினும், அம்மித்திரன் தான் முற்பிறப்பில் செய்ததீவினையின் கொடுமையால்நன்னெறியிலிருந்து மாறி, சாஸ்திரங்களாலும் சான்றோர்களாலும் இகழக்கூடியதும் ஜாதிவர்ணாச்ரமங்களுக்குத் தகுதியற்றதுமானதீயகருமங்களைச் செய்யத்துணிவானாகில்,உடனே அவனைச்சத்ருவாகப்பாவித்து அவன் பழக்கத்தையும் விலக்கவேண்டும். அன்றேல், நம்மையும் அவன் கெடுத்துவிடுவதன்றி, உலகிலுள்ள ஜனங்களும் நம்மைத்தூற்றுவார்கள். "लोकापवादाद्भयम्" உலகத்தோர்கள் சொல்லும் அபவாதத்திற்கு நாம் பயப்படவேண்டும்" என்று ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளே கூறியுள்ளாராகையால் அதை நாம் அவசியம் கவனிக்கவேண்டும். ஆகையாற்றான் ஸ்ரீ ராகவனும், தன் பார்யையான ஸீதாதேவியானவள் ஒரு சிறிதும் தோஷமற்றவளாயிருந்தாலும, லோகாபவாதத்தைவிலக்கவேண்டியே, மிகஜாக்கிரதையாய் பாதுகாக்கவேண்டிய கர்ப்பிணியாயிருக்கும் சமயத்தில், ஆரண்யத்தில் விடும்படி அனுப்பினாரெனக்கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், புற்றின்மேலிருக்கும் கயிற்றைஇரவில் கண்ணுற்றோருக்கு, உண்மையில்அது கயிறாகவிருப்பினும் பாம்பென்றே தோற்றுவதுபோல்நம்மிடம் தோஷமில்லாவிடினும் தோஷமுள்ளவர்களின் சம்பந்தத்தால் நம்மையும் பார்ப்போர்கள் அவ்விதம் கருதுவது இயல்பே. ஆகையால் அத்தகையசம்மந்தத்தை முற்றிலும்விலக்கவேண்டுவது இன்றியமையாததாகும்.

# ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி௵ கார்த்திகை௴ ௨௮௨

## சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே சிறந்த தர்மம்.

மற்றும் ஸ்திரீகளுக்கு எக்காலமும் பர்த்தாக்களேசரணம் என்று அக்னி சாக்ஷியாய் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் பதிக்குத் திருப்தியில்லாத நடத்தையையுடைய பெண்டீர் காட்டுத்தீயிலகப்பட்ட இளம் பூங்கொடியைப்போல்தகிக்கப் படுகிறாள். என்று பல வாறாய்ச்சிந்தித்துத் துக்கப்படும் அப்பெண் புறாவானது அம்மரத்தின்மீது தன்பிரிவால்கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பதியைப்பார்த்துப் பின் வருமாறு சொல்லத் தொடங்கியது. ஹேபிராணநாத! நான் தங்களுடைய சிரேயஸ்ஸை யுத்தேசித்துத்தெரிவிக்கிறேன். என் வார்த்தையைச் செவியுற்று அவ்விதமே செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். அஃது யாதோவெனில்; தங்களைச் சரணமடைந்தோர்களைப் பாதுகாப்பதென்கிற தர்மத்தை ஒரு சமயமும் கை விடக்கூடாது. பக்ஷிகளைக்கொண்டு ஜீவிக்கும் படியான இவ்வேடன் தங்களுடைய இருப்பிடமாகிய இம்மரத்தினடியில் பசியாலும் குளிரினாலும்மிகவும் வருந்துகிறான். சரணாகதியடைந்த அவரைத்தாங்கள் பூஜிக்கவேண்டும். பிராமணனை வதம் செய்பவனும், லோகங்களுக்கு மாதாவாய் விளங்கும் கோவை வதம் செய்பவனும், தன்னைச்சரணாகதியடைந்தானை ரக்ஷியாது விடுபவனும் அடையும் பாபம் சமமானதே. நம்மைக்கடவுள் புறாவாக சிருஷ்டித்து அந்தஜாதிக்குரிய விருத்தியால்ஜீவிக்கும் படியாகச்செய்திருப்பினும் நமது சக்திக்கியன்ற வரையில் சரணமடைந்தோரை ரக்ஷிக்கவேண்டியது அவச்யம். எந்தகிரஹஸ்தன் தன் சக்திக்கியன்றவாறு தர்மத்தை யனுஷ்டிக்கிறானோ

அவன் பரலோகத்தில் உத்தமமான சிரேயஸ்ஸை யடைகிறானென்று பெரியோர்கள் மூலமாய் அறிந்திருக்கிறேன், என்றும்,

स त्वं सन्तानवानद्य पुत्रवानपि च द्विज ।
त्वं स्वदेहे दयां त्यक्त्वा धर्मार्थौ परिगृह्य च ॥
पूजामस्मै प्रयुङ्क्ष्वाद्य प्रीयेतास्य मनो यथा ।
शरीरे मा च सन्तापं कुर्वीथास्त्वं विहङ्गम ॥

ஹே நாதா! தாங்கள் கிரஹஸ்தாசிரமத்திற்கு முக்கிய பிரயோஜனமான புத்திரனென்னும், ஸந்தானபாக்கியத்தையும் பெற்றிருக்கிறீர்கள். இனி இச்சரீரத்திலபிமானம் வைத்து அடையவேண்டிய பயன் ஒன்று மிருப்பதாகத்தோன்றவில்லை. ஆகவே இந்த நச்வரமான தேகத்தில் தங்களுக்கிருக்கும் அபிமானத்தை விலக்கி தர்மங்களைக்கைவிடாமல் இப்பொழுதே சரணமடைந்த இவ்வேடனை நன்கு பூஜியும். அதுவும் எவ்விதமாராதித்தால் அவன் மனதிற்குத் திருப்தியுண்டாகுமோ அவ்விதம் ஆராதிக்கவேண்டும். நீர் பார்யாவியோகத்தால் சரீரத்திற்கு துக்கம் நேரிடுவதை இச்சமயம் கொள்ளக்கூடாது. உம்முடைய சரீரயாத்திரைக்காக வேறு சிறந்தமனைவியை அடையப்போகிறீர்." என்று இவ்விதம்சரணமடைந்த இவ்வேடனைக் காப்பாற்ற வேண்டிப் பலவித தர்ம சூக்ஷ்மங்களைப்போதித்து அதிகத் துக்கத்துடனிருக்கும் அப்பெண்புறுவானது கூட்டிலிருந்தபடியே தன்பதியைப்பார்த்தது.

தன்பத்தினியால் அறிவிக்கப்பட்ட தர்மத்துடனும் யுக்தியுடனுங்கூடிய நன் மொழிகளைச் செவியுற்ற விருக்ஷத்தின்மீது இருக்கும் அவ்வாண் புறுவானது மிகுந்த சந்தோஷத்துடன் அவ்வேடனிருக்குமிட மறியவேண்டி அம்மரத்தினடியை உற்று நோக்கிற்று. ஓரிடத்தில் சிலைமேல் தலைவைத்து குளிரால் தாக்கப்பட்ட ஒடுங்கிய சரீரத்துடனும் சுருட்டிக்கொண்டுநித்திரை செய்யும் வேடனைக்கண்டு, அவனருகிற் சென்று, விதிவழுவாது அன்புடனவனை நன்கு பூஜிக்க வேண்டுமென்ற கருத்துடன் பின்வருமாறு கூறதொடங்கிற்று.

# மறுபிறப்பு.

(சுஅ௱வது பக்கத்தொடர்ச்சி.)

## 10-வது ஜீவன் சந்திரமண்டலத்திலிருந்து இறங்குவான்.

இவ்விஷயத்தில் சாந்தோக்கியத்திலுள்ள மந்திரத்தின் அபிப்பிராயமிது—அங்கு சந்திரமண்டலத்தில் வஸிக்கவேண்டியநாள் வஸித்து பிறகு இதே மார்க்கத்தில் மறுபடியும் திரும்புகிறான். எவ்விதமென்றால் சந்திரலோகத்திலிருந்து ஆகாயத்தையும் ஆகாயத்தினின்று வாயுவையும் வாயுவாய் ஆனபிறகு தூமத்தையும் தூமமாய் ஆனபிறகு அப்ரமாக ஆகி அப்ரமாய் ஆனபிறகு மேகமாய் ஆகிறது. மேகமாய் ஆன்பிறகு வர்ஷிக்கிறான். அவர்கள் இவ்வுலகில் நெல் பயறு முதலிய தான்யங்களாயும் ஓஷதிகளாயும் வனஸ்பதிகளாயும் எள்ளு கொள்ளாகவும் பிறக்கிறார்கள். இதிலிருந்தல்லவா வெளியேற முடியாது எவனெவன் அன்னத்தை சாப்பிடுகிறானோ எவன் ரேதஸ்ஸை விடுகிறானோ அவன் மயமாகவே ஆகிறான். அதில் எவர்கள்புண்யமான அனுஷ்டானமுடையவர்களோ அவர்கள் புண்யமான பிராமணப் பிறப்பையோ க்ஷத்திரியப்பிறப்பையோ, வைசியப் பிறப்பையோ, அடைவார்கள். எவர்கள் பாபமான நடத்தை உயைவர்களோ, அவர்கள் பாபமான நாய்ப்பிறப்பையோ, பன்றிப்பிறப்பையோ, சண்டாளப்பிறப்பையோ, அடைவார்கள்என்றது. இனிஇச்சுருதியின்கருத்தைவிரிததறிவோம். இச்சீவன் தூமாதிமார்க்கத்திற் செல்லும்போதேதனது பாபத்திற்கனுகுணமானநரகலோகங்களிற்பாபத்தைச்செவ்வன அனுபவித்துப்பிறகுசந்திரமண்டலமென்றஸ்வர்க்கலோகத்தில்வெகுகாலம்சுகானுபவம்செய்து பிறகு மறுபடியும் பூலோகத்திற்கிறங்குவதற்காக ஆகாயம் முதலான பலவிடங்களிலிறங்கி பூமியில்தானியங்களாகவோ புற்பூண்டுகளாகவோ ஆகிப்பிறகு அதைச்சாப்பிடப்

10-வது ஜீவன் சந்திரமண்டலத்திலிருந்து இறங்குவான். கூறு

பட்டவர்களிடம் ரேதஸ்ஸ்வருபமாய்ப்பரிணமித்து ஸ்திரீயோனியிற்சென்று கருத்தரித்து அங்கிருந்து அந்தந்தப்பிராணிரூபமாய் வெளியேறுவதாய் விளக்கிபதாயிற்று. இங்கு நமக்கு ஓர் ஸந்தேகமுண்டாகலாம். எவ்விதமெனில், இங்கிருந்துசெல்லும் ஜீவன் போகும்போதே தனது பாபகன்மத்துக்கனுகுணமாய் நரகங்களையனுபவித்து சுத்திபெற்றுவிட்டதால் இவனிடத்திற் பாபமேஇல்லை. புண்யலோகமான சந்திரமண்டலத்திலும் புண்யசுகத்தை அனுபவித்துவிட்டதால் புண்யமும் இல்லையே. ஆகவே புண்பாபமற்ற ஞானியின் சீவன்போலிருக்கும் இச்சீவன் பூமியிலிறங்குவானேன். புண்யபாபங்களை உதறி நிரஞ்ஜனனாய் பரமாத்ம ஸாம்யத்தை அடைந்து விடுகிறானென்றல்லவா சுருதி கூறுகின்றது. அதன்படி இவனிடமிருந்த புண்யபாபம் காலியாய்விட்டதே இவனும் ஏன் சாச்வதஸ்தானத்தையடையக்கூடாது. அப்படியடையாமல் பூலோகம் திரும்பக்காரணமென்ன? பூமிக்கும் சந்திரனுக்கும் மிகச்சொந்தமுண்டென்றும் சந்திரமண்டல பரியந்தம் பூமிக்கு ஆகர்ஷணசக்தி யிருக்கிறதென்றும் முன்னமே கூறினமையால் அவன் பூமிக்குத்தான் திரும்புவானென்றும் பூமியில் வந்தபிறகு ஞானஸம்பத்தையடைந்து அர்ச்சிராதி மார்க்கத்திற் சென்றவனுக்குத்தான் மோக்ஷமென்றாலும், இருக்கட்டும் இதை ஒப்புக்கொள்கிறோம். ஆனாலும் சந்திரமண்டலத்திலிருந்திறங்கும்போது முற்கூறியபடி எல்லா ஜீவர்களும் ஸமமானவர்கள்தானே, அப்படியிருக்க புண்யம்செய்தவர்கள் நற்பிறப்பையும் பாபம்செய்தவர்கள் தீயஜாதியையுமடைவார்களென்று சொல்லும் கருத்து யாதென்பது பெருத்தசந்தேகத்திற்கிடம்தான் என்பதே.இதன் ஸமாதானத்தை கவனிப்பாம். இங்கு சந்திரமண்டலம் சென்ற ஜீவர்கள் போகும்போது எவ்விதம் பேதமுள்ளவர்களோ அவ்விதமே பேதமுள்ளவர்கள்தான் எப்போதும். எவ்விதமென்றால் இவர்கள் இங்கிருந்து போகும்போது அனுபவிக்கும் நரகலோகங்களில் அந்தந்தப்பாபங்கள் முழுமையும் நீங்கிவிடுகிறதில்லை. மற்று அவை கொஞ்சம் கொஞ்சம் மீதிருயிக்கும்போதே அவை

களைவிட்டு வெளியேறிவிடுகின்றன. இவ்விஷயத்தை ஸூத்திர காரர்

कृतात्ययेऽनुशयवान् दृष्टस्मृतिभ्यां यथेतमनेवं च ।

என்ற ஸூத்திரத்தினுல் விளக்கினர் இங்கு பாஷ்யகாரர் நன்கு விரித்திருக்கின்றார். அதாவது-ஸ்வர்க்கஸுகத்தை அனுபவித்த பிறகு எல்லாக்கன்மமும் தீர்ந்துவிடுகிறதா ஏதாவது கொஞ்சம் மீதமுண்டா என்றால் மீதமுண்டு என்பதை அநேக யுக்திகளாலும் சுருதிகளாலும் விளக்கியுள்ளார். இதை அவலம்பித்தே யான் விஸ்தரிக்கின்றேன். அதாவது இவர்கள் கொஞ்சம் கொஞ்சம் மீதியோடுதான் வெளியேறுவார்கள். ஏனெனில் பாபமுள்ள ஜீவன் அதர்க்குத்தகுந்த நரகத்தில் தனது பாரத்திற்குத் தகுந்தபடி அவ்வண்டத்திலமிழ்ந்து விடுமென்றும் பிறகு பாபம் குறையக்குறைய மேற்கிளம்புமென்றும் மேலே வந்தவுடன் சூர்யகிரணம் பட்டவுடன் ஜீவனை அது இழுக்குமென்றும் கூறினேன். ஆகவே அப்படி இழுக்கும்போது அந்த நரகஸம்பந்தமான பாபம் மீதமிருக்கலாம். ஆசார்யாள் பாபம் மீதமென்பதைத்தன் திருமுகத்தாற் கூறுமல் புண்யம் மீதமிருக்கும் போதே ஸ்வர்க்கத்தை விட்டிறங்கிவிடுகிறுனென்று அனுக்கிரகித்து அதற்குத்தகுந்த ஆதாரங்களையே கொடுத்தார். அதெவ்விதமெனில், ஜீவன் இங்கிருந்து செல்லும்போதே ஜலமயமாய் இருக்கிறதென்று கூறியபடி ஜலமயமான அச்சீவன் அங்கு சந்திரமண்டலத்தில் புண்ய ஸம்பந்தத்தால் ஒட்டிக்கொண்டு சுகத்தை அனுபவிக்குமென்றும் அந்த ஒட்டுதல் எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு துர்பலத்தால் அச்சீவன் ஸ்வர்க்கஸுகம் போய்விடுகிறதேயென்று வருத்தப்படும்போது அவ்வருத்தத்தின் உஷ்ணத்தினுல் ஜலமயமான சரீரம் உருகி அதைவிட்டுக் கீழ்நோக்கிவிடுமென்றும் கூறினர். இதுபோலவே பாபிகளின் பாபமும் பாக்கியிருக்கும்போதே சூர்யகிரணம் அவனை இழுத்துவிடுமென்பதும் பொருந்தும். இப்படியாகும்போது சந்திரமண்டலத்திலிருந்திறங்கும் ஜீவர்

கள்எல்லாரும் ஸமமாய் இருக்கமாட்டார்களென்றும் அதனால் புண்யபாப விசேஷத்திற்குத்தக்கபடிதான் ஜனனமெடுப்பார்களென்றும் சாந்தோக்ய சுருதிகூறியது முழுமையும் ஸரிஎன்பதை இன்னும் விளக்கவேண்டாம். இனி ப்ரக்ருதத்தைப்பார்ப்போம். இவ்விதம் சந்திரமண்டலத்திலிருந்திறங்கும்ஜீவன்ஆகாயத்தையும் வாயுவையும் அப்ரத்தையும் மேகத்தையுமடைந்து பிறகு மழைரூபமாய் பூமியிலிறங்குவான் என்று சொன்ன சுருதியால் வாயுவாய் ஆகி அப்ரமாய் ஆகி மேகமாய் ஆகி என்று சொல்லியிருக்கிறதே அங்கு அச்சீவன் அததாகவே ஆய்விடுகிறானென்றால், அப்படியல்ல; இவன் அந்தந்தஸ்வரூபமாய் ஆய்விடுவதில் சுருதிக்குத்தாத்பர்யமல்ல. ஏனெனில் அவ்விதம் ஆவான்என்றிருந்தால்ஐந்தாவது ஆஹுதியில் இந்தஜலம் புருஷனாக ஆகிறது என்ற சுருதிக்கு விரோதமாகும், ஆனதால்ஐந்தாவது ஆஹுதிமுடிய ஜலமயமாய்த் தானிருக்கிறானென்பது உண்மை. வாயுமுதலிய லோகங்களில் அதிஸூக்ஷ்மமாய்இருப்பானென்பதைக் காட்டுவதற்காக வாயுவாய் ஆகிறான், மேகமாய் ஆகிறானென்று சொன்னதே தவிர வேறல்ல. ஆனால் இங்கிருந்துபோகும் ஜீவன் எவ்வளவு தாமதித்துச் சந்திரமண்டலத்தை அடையுமோ அதுபோல் இறங்குவதற்கும் தாமதம் அதிகமாகவோ அல்லது அதிற்சற்று குறைவாகவோ உண்டோ என்றால் இல்லை. அதிசீக்கிரத்தில் பூமியிலிறங்கிவிடுமென்றார். இங்கிருந்து போகும்போது ஜீவன்லேசாய் இருப்பதாலும் பஞ்சுபோல் உயரப் போகும் ஸ்வபாவமுள்ளதாயும் சொன்னீர்களே, அப்பஞ்சிலிருந்து அழுக்குக்கூட கொஞ்சம் குறைந்துவிட்டதால் இப்போது கீழே சீக்கிரம் எவ்விதமிறங்குமென்றால் கூறுவோம். இங்கு சந்திரமண்டலத்திற்குப் போனபிறகு பஞ்சுபோன்ற ஜீவன் மிகவும் நனைந்து ஊறிவிட்டதாய் வைத்துக் கொள்ளுங்கள். அதனால் ஆங்காங்கு விசேஷமாய்த் தங்கமாட்டான். முன்கூறிய சாந்தோக்ய சுருதியிலும் இங்கிருந்தல்லவா மிகவும் வெளியேறமுடியாது என்று தானியம் முதலிய தன்மையை பூமியில் அடைந்தபிறகு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பூமிக்குவருகிற பரியந்தம் வேகமான கதிதான் என்

றேற்பட்டது. இவ்விதம் பூமிக்குவந்து தானியமோ புற்பூண்டாகவோ ஆய்விட்டானென்று வைத்துக்கொள்வோம்.“இங்கிருந்தல்லவா மிகவும் வெளியேறமுடியாது”என்று சுருதியின் தாத்பர்யத்தை கவனிப்போம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

## ௧௧-வது இதிலிருந்தல்லவா வெளியேற முடியாது.

இதிலிருந்தல்லவா வெளியேற முடியாது என்ற இவ்விஷயத்திலும் நமது புத்தி கொஞ்சமேனும் செல்லாதுபற்றி இந்த சுருதிக்கு ஆசார்யாள் எழுதியிருக்கும் பாஷ்யத்தின் தாத்பர்யத்தை விரித்து வரைகிறேன். இங்கு ஊன்றிப் பார்த்தால் ஐயோ இப்படியா கஷ்டப்படுகிறது என்று ஆஸ்திகனது மனம் நடுங்கும். அது இவ்விதம். இங்கு மேகத்தினின்றும் மழைத்துளியோடு கீழிறங்கும் ஜீவன் மலையிலோ குகையிலோ நதிகளிலோ ஸமுத்திரத்திலோ காட்டிலோ ஜலமில்லாப் பிரதேசத்திலோ இன்னும் எங்கேயோ சொல்லமுடியாதவிடத்தில் மழைத்துளியோடு விழலாம். மலையில் விழுந்ததும் அங்கு தங்கலாம். இல்லாவிடில் மழையினால் ஏற்பட்ட பிரவாகத்தோடு நதியில் விழலாம். அங்கிருந்து சமுத்திரத்திற் சேரலாம். சமுத்திரத்திற் சென்றவுடன், எப்போதாவது அங்குள்ள ஜலஜந்துக்கள் அருந்தும் நீரோடு அதன் வயிற்றிற் போகலாம். அஜ்ஜந்துவை இன்னொன்று சாப்பிட்டால் அங்கிருந்து அதன் வயிற்றுக்குள்ளும் போகும். அதை இன்னொன்று விழுங்கினால் என்று இப்படியே எத்தனைகாலம் அச்சீவன் ஒவ்வொன்றின் வயிற்றிற்குள்ளும் போகவேண்டுமோ, பிறகும் இதைச் சாப்பிட்ட ஜீவசரீரம் இறந்துபோய்விட்டால் இந்த ஜீவனும் ஸமுத்திர ஜலத்தையே அடையலாம். பிறகு சூர்யனின் வெப்பத்தால் உயர ஆவிரூபமாய்க் கிளம்பும் ஜலத்தோடு மறுபடியும் மேகமண்டலத்தை

அடையலாம். அங்கிருந்து பழையபடி கீழே விழும். இப்படி எத்தனை தடவைதானுகுமோ. கடவுள் தானறிவா ரென்று சொல்வதற்குச் சந்தேகமுண்டோ?பிறகு குகையிற்போய்விழுந்ததாய் வைத்துக்கொள்வோம். அங்கு புற்பூண்டாகவோ, மரமாகவோ முளைத்தால் அங்கு ஒருவராலும் போகமுடியாதபடியால் அந்தஜீவன் எத்தனைகாலம் மரம்கொடியாய் இருக்குமோ அல்லது புழுப்பூச்சிகள் சாப்பிடக்கூடிய அணுவாய் இருந்து அந்த ஜன்மத்தை எத்தனைதடவை அடையுமோ, ஒருசமயம் துஷ்ட மிருகங்களாலோ மானுலோ சாப்பிடப்படலாம். அவைகளும் இன்னொன்றால் என்று எவ்வளவு சுழல் ஏற்படுமோ. சில சமயம் ஒரு ஜந்துவும் சாப்பிடக்கூடாத செடிகொடிகளாய்ப் பிறந்தால் அதிலேயே வெகுகாலமிருந்து வறண்டுபோய்ப்பழையபடி சூர்ய கிரணத்தா லிழுக்கப்பட்டு மழையோடு கீழிறங்கி முளைத்தாக வேண்டாமா? அப்படி முளைத்து சாப்பிடப்பட்டாலும் ரேதஸ்ஸைக் கொடுக்கக்கூடிய மனிதஜன்மத்திற்கு அது வரவேண்டாமா? அதாவது மனிதர்கள் சாப்பிடக்கூடிய தானியத்திலிறங்கவேண்டும். அப்படி நெல்முதலிய ஜன்மத்திலிறங்கினுலும் சாப்பிடும் அன்னத்தில் ஏதாவது ஒரு கபளத்தில் தான் அகப்படலாம். அவ்விதம் ஜீவகலையோடுகூடின அவ்வன்னம் எல்லாம் துறந்த ஸன்யாஸிகளின் அன்னத்திலோ, பாலர்களிடத்திலோ, ஸ்திரீகளிடந்தோ, கிழவர்களிடத்தோ போய்ச் சேர்ந்துவிட்டால் யாது பயன்? அவர்களது வயிற்றிற் சேர்ந்து பிறகு அவர்களது மலத்தோடு வெளியேறி அம் மலத்தைப் பன்றி முதலிய பிராணி சாப்பிட்டுவிட்டால் அதிலும் புருஷப் பன்றி சாப்பிட்டால் அங்கிருந்து ஸ்திரீ யோனியிற் சென்று பன்றியாகவோ நாயாகவோ இருக்கவேண்டும். இவ்விதம் எவ்வளவுதான் சொல்லலாம். இப் பாப ஜன்மம் எத்தனை கோடி ஜன்மமெடுக்கலாம்? சிவ! சிவ! இவ்விதம் உழண்ட ஜீவன் புண்ய வசத்தால் நல்ல யௌவனபுருஷன் சாப்பிடும் அன்னத்திற் பிரவேசிக்கலாம். அப்படிப் பிரவேசித்த ஜீவன்தான் ஐந்தாவது ஆஹுதியான ஸ்திரீயோனியிற் சேரும். அங்கிருந்து மனித

ஜன்மத்தைப் பெறலாம். ஆரியர்களே! சற்று கவனித்துப் பாருங்கள். இம் மானிடஜன்மம் கிடைப்பது எவ்வளவரிதென்பதை ஊன்றிப் பாருங்கள். ஆதல்பற்றியே பரம கருணாமூர்த்தியர்ன நம் பரமாசார்யாள் மந்தர்களைப்பார்த்து உபதேசிக்கத் திருவுளம் கொண்டு திருவாய்மலர்ந்தருளிய விவேகசூடாமணி என்னும் கிரந்தத்தின் ஆரம்பத்தில் जन्तूनां नरजन्मदुर्लभं என்ற சுலோகத்தை ஆரம்பித்தனர். இவ்விதம் பகுத்தறிவும், ஆசார்யாளின் உபதேசத்தைக் கேட்க புத்தியும் வாய்ந்த நாம் தலைகீழாய்ப்பாய ஆரம்பித்தால், கருணாமூர்த்தி என்செய்வார். இவ்விஷத்தை மனதில் வைத்துக்கொண்டே ஓர் மகான்

देहत्यागकृतेऽर्पितेन करणव्यूहेन देहेन च
स्वानर्थं बत जन्तुरर्जयति चेन्मन्तुर्नियन्तुः कुतः ।
शस्त्रे शत्रुजयाय नैजगुरुणा दत्तेऽथ तेनैव चेत्
पुत्रो हन्ति निजं वपुः कथय रे तत्रापराधीतु कः ॥

இத் தேகத்தை ஒழித்து இனி மறுபிறப்பில்லாமையின் பொருட்டு நமக்குக் கைகால், இந்திரியம், புத்தி, ஆசார்யன், வேதம், சாஸ்திரங்களைக் கொடுத்துதவியும் அவைகளால் தனக்கே அனர்த்தத்தை விளைவித்துக்கொண்டால் பகவானுக்குக் குற்றமேது? எதுபோலென்றால், ஓர் மகான் தன் புத்திரனிடத்திலன்புடன் ஓர் கத்தியைக் கொடுத்து இதனால் நீ எந்த சத்துருக்களையும் வெல்லலாமென்று சொன்னால், அக்கத்தியைக்கொண்டு அவன் தனது கழுத்தை அறுத்துக் கொண்டால் இதிற் குற்றம் யாருக்கு என்றார். இஃதிருக்கட்டும். ஆகவே இவ்வளவு கஷ்டப்பட்டு எடுக்கப்படும் இம் மானிட ஜன்மத்தின் மகிமையை அறியாமல் மிருகங்களுக்கும் கேடுகெட்டு, இப் பாழும் உடம்பை வளர்க்கப் பிறந்ததாய் நினைத்து, "இயமன் இருக்கிறான். நாம் பரலோகம் செல்வோம். நாம் நரகத்தை பாபத்திற்குத் தகுந்தபடி அனுபவிப்போம். எல்லாவற்றையும் பார்த்துக்கொண் டிருக்கிற கடவுள் ஒருவரிருக்கிறார். அவரை வஞ்சிக்க முடியாது.

அவருக்கு எங்கும் கண், எங்கும் காது. அவர் காது கேட்காமல் ஒரு சமாசாரத்தையும் பேசமுடியாது. அவர் மனதிலுமிருப்ப தால் நாம் நினைப்பதுவோ அவருக்குத் தெரியாமலிராது" என்ற எண்ணம் கொள்ளாமல் காலையிற் படுக்கையை விட்டு வெயி லின் உபத்திரவத்தாலும், ஸ்திரீகளின் தொந்தரவிற்காகவும், எழுந்திருப்பதும், படுக்கையில் உட்கார்ந்துகொண்டு தாம்பூ லம் போட்டு பிர்மபத்திரமாம் ஒன்றை வாயிற் பிண்டம்போல டைத்துக்கொண்டு வீண் வம்பு வசவுகளுடன் எழுந்திருப்ப தும், தன் படுக்கையைக்கூட சுற்ற சக்தியற்றவனுப் வெளி யேறிக்கைகால்களிற் கொஞ்ச தண்ணீர் பட்டதோ படவில்லை யோவென்று காட்டிவிட்டு, உடனே குடிவெறியன்போற் காபி பானம் அருந்துவதும், பிறகு வாய்க்கு ஓய்ச்சலில்லாமலே ஆடு தழை மேய்வதுபோல் வெற்றிலையைக்கொலை செய்வதும் பிறகு மத்தியான்ன போஜனமும் இடைவேளை போஜனமும் ராத்திரி போஜனமும் செய்வதும், போஜன நியமமில்லாமற் கிடைத்த தை யெல்லாம் கண்ட கண்ட விடத்திற் புசித்து ஜீவனம் செய் வதுமாய் ஈசனென்றும் கன்மமென்றுமெண்ணமில்லாமலுமிரு க்கிற இக்காலத்திய மனிதர்களுக்கு மூன்றுவது வழியும் போ தாமல் நான்காவது பாதை புதிதாய்த் திறக்கப் பட்டிருக்கு மென்றும், நரகங்கள் புதிது புதிதாய்த் தயாரிக்கப்பட்டிருக்கு மென்பதிற் சந்தேகமுண்டோ? ஆரிய வம்சத்திற் பிறந்தவர் களே! யோசித்துப் பாருங்கள். இத்தகைய மனிதர்கள் லோ கத்திற்காகப் பாடுபடும் பரோபகாரிகளென்றால் இவர்களால் எந்த லோகம் முன்னுக்கு வரலாம்? எந்த ஈசன் இவன் காரியத் திற்கு சாதகமாய் அனுக்கிரகம் செய்வான்? சற்றுயோசித்துப் பாருங்கள். அவனல்லாது அணுவு மசையாது என்ற பழமொ ழியை மறந்தீர்களோ? அவனது பெயரை நினையாமலும் அவ னது பேச்சைக் கேட்காமலும் இருந்தால் அவனது லோகம் கிடையாதென்பதைத் திண்ணமாய் நம்புங்கள். ஆகா! எங்கோ வேறுவழி சென்றுவிட்டோம். இனி மார்க்கத்தில் நடப்போம்

## 12வது கன்மமே நற்கதிகொடுக்கும். ஈசன் வேண்டாம்.

---

இவ்வித மெல்லாம் பாப புண்யங்களால் நாம் எடுக்கும் ஜன்மத்தைச் சிந்தித்துப் பார்த்தால் ஈசன் ஒருவன் எப்போதும் நம்மை கவனித்துக்கொண் டிருப்பவன் இருக்கவேண்டியதோ? இல்லைபோ லிருக்கிறதே. ஏனெனில் இவ்வளவு குரூரமாய் நடத்த அவனுக்குமனது தான் ஸஹிக்குமா? நெஞ்சில் ஈரமே இராதோ? இதுதானு ஸர்வக்ஞனுக்கு இலக்ஷணம்! இவன்தானு தீனதயாளு? என்றெல்லாம் கேள்விபிறக்குமானதால் நாம் இனி ஈசனை ஒப்புக்கொள்ள மாட்டோம். ஆனுல் கன்மாவை ஒப்புக்கொள்கிறோம். அக் கன்மாதான் எல்லாவற்றிலும் வல்லமை பொருந்தியது. ஆதல்பற்றியே

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः । என்றும்,
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरैः कृतम् ।

என்றெல்லாம் அர்ஜுனனுக்கும் கிருஷ்ணன் கூறினுர். ஆகையால் நற்கர்மத்தைச் செய்தால் நல்ல பலனைப் பெறுவோம். தீய கன்மத்தாற் தீயவழி செல்வோ மென்றுயிற்று என்றுல் நிரம்ப சந்தோஷம். நீ ஈசனை ஒப்புக்கொள்ள வேண்டாம். கன்மத்தை மாத்திரம்செய் போதும். இவ்வழிக்காவது வந்தாயே. இம்மட்டினின்றும் உன்னைக் கடவுள் காப்பாற்றுவார். இதென்ன பழையபடியும் கடவுள் என்கிறீர் என்பீரோ? சொல்கிறேன். கன்மத்தை மட்டிலும் ஒப்புக்கொள்வது தான் நமது முதன் மதம். இதைப்பற்றி விஸ்தரித்தவர் ஜைமினி எனப்படுவார். கன்மம் தான் பலன் கொடுக்குமென்றெழுதிய இவரது சாஸ்திரம் தான் பூர்வமீமாம்ஸை எனப்படும். இதற்கடுத்தபடி உத்தரமீமாம்ஸை. அதில் ஈசனைக் கன்மத்திற்குமேல் ஒப்புக்கொண்டெழுதிவைத்தார் வியாஸபகவான். இவர்தான் விஷ்ணு: இவர் கர்மத்திற்கு பலன் கொடுப்பவர் ஈசனென்றுர். அவர். கன்மமே அபூர்வம் என்பது மூலமாய்ப் பலனளிக்குமென்றுர்

இவ்விரு சாஸ்திரங்களையும் ஒன்று சேர்த்து இருவரும் ஒரே அபிப்ராயம் கொண்டவர்கள்தான் என்று நமது ஆசார்யாள் சமாதானம் சொல்கிற அழகைப் பாருங்கள்! இங்கு இவ்விதம் கூறுகின்றனர். மீமாம்ஸகர்கள் கன்மமே பலன் கொடுக்குமென்றனர். வேதாந்திகள் கன்மம் அசேதனமானது பற்றி, ஈசன்தான் பலனளிப்பார் என்றார்கள். ஆனால் வியாஸருக்கும் ஜைமினிக்கும் மதபேத முண்டோவெனிற் கிடையாது. மீமாம்ஸகர்கள் சொல்லும் வார்த்தைக்கு இது உபமானம். பாத்திரம் சமைக்கிறது. விறகு சமைக்கிறது கத்தி வெட்டுகிறது. இவைபோற் கன்மம் பலனளிக்கிற தென்றர்த்தம். இதனால் என்ன கிடைத்த தென்றால், விறகு நன்றாய் இருந்தால் அடுப்பில் மடமடென் றெரியும்போது சமையற்காரன் விறகு சமையல் செய்கிறதென்பதும், கூர்மையான கத்தியினால் சுலபமாய் வேலைசெய்கிறவன் கத்தி வெட்டுகிறதென்று சொல்கிறது போலும் என்றர்த்தம். ஆகவே கன்மத்தை மட்டிலும் சரியாய் ஒப்புக்கொண்டு நீங்கள் கன்மம் செய்தால், கடைசியில் நீங்கள் தூமாதி மார்க்கத்திற்காவது தகுதியுள்ளவர்களாய் ஆவீர்கள் இங்கு நாம் ஈசுவரனை ஒப்புக்கொள்ளாம லிருந்தால் லோகநியாயத்திற்கும் ஒட்டாது என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். உலகில் யாவரும் வயிற்றுப்பிழைப் பிற்காகப்பாடு படுகிறார்கள். அவனுக்கு சூரியன் அஸ்தமித்தவுடன் அவன் செய்த கன்மாவானது அதற்குத் தகுந்தகாசைக் கொடுத்த னுப்பிவிடுகிறதாய்ப் பார்த்தோமா கேட்டோமா இரண்டுமில்லையே. மற்று இக்கன்மாவைப் பார்த்து சந்தோஷித்த யஜமானன் எல்லோரும். பொழுதடையுமட்டும் வேலைசெய்த போதிலும், அவனவனது கன்மாவின் யோக்கியதைக்குத் தக்கபடி கூலி கொடுத்தனுப்புவதைத்தான் கண்டோம். அதுபோல் நமது கன்மாவைக்கண்டு சந்தோஷமடைந்து அதற்குத்தகுந்த லோகத்திற்கனுப்ப அவனுக்குத்தான் வல்லமையுண்டு. இதை அறிவிப்பதற்காகவே உபநிடதத்திலும் "எவனை இந்த உலகினின்று மேல்லோகத்

திற்கு அனுப்பவேண்டுமென்று நினைக்கிறானோ, அவனை இவன் தான் நற்கன்மம் செய்யும்படி தூண்டுகிறவன். எவனைக் கீழே தள்ள நினைக்கிறானோ, அவனை இவன் தான் கெட்டகன்மத்தைச் செய்யச் செய்கிறான்'' என்றது இம் மந்திரார்த்தத்தால் நல்லது செய்யவும் கெட்டது செய்யவும் தூண்டுகிறவன் ஈசன் தான் என்று அர்த்தம் கொண்டுவிட வேண்டாம். கன்மத்திற்கு மேல் ஈசன் உண்டு என்பதைக் காட்டமட்டிலும் வந்ததாய்க் கொள்ளுங்கள். இதிருக்கட்டும். இவ்விதமானால் ஈசன் கருணையில்லாமல் இப்படி நரகத்தில் அமிழ்த்தலாமா வென்றீர்கள். இதற்காக நான் உங்களை இதைக் கேட்கிறேன். நியாய ஸ்தலத்தில் ஜட்ஜி சிலரைத் தூக்கும்படியும், சிலரைக் கடுங்காவலாகவும், சிலரை தீவாந்திரத்தில் தள்ளிவிடவும், பலவாறு தண்டனை விதிக்கிறாரே அவன் படும் துயரம் அவருக்குத் தெரியாதா அவனது பெண்டீர்பிள்ளைகள் படும்பாடு அவருக்குத்தெரியாதா? அவர்மனதில் கொஞ்சமாவது இரக்கமில்லையே என்று யாராவது ஜட்ஜியைத் திட்டுவதுண்டா? ஆகா! நியாயப்படி தண்டனையைக் கொடுக்கும் இந்த நியாயாதிபதியைப்போல் தர்மப்பிரபு வேறொருவருண்டா வென்றல்லவா கூறுகின்றனர்? அதுபோலென்று இங்கும் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே இத்தகைய ஈசனிடத்தில் கருணையற்றவரென்ற பழியைச் சுமத்த வேண்டாம். இவ்வளவாலும் நமக்கேற்பட்டதென்னவென்றால் கன்மம் உண்டென்றும் அதற்குத்தக்க பலனளிக்க ஈசனொருவனுண்டென்றும் நாம் யஜமானன் முன்னிலையில் பயபக்தியுடன் கன்மா செய்தால்தான் அவ்வேலையை நன்றென்று ஒப்புக்கொண்டு தயவுடன் பலனளிப்பாரென்றும் அப்படி ஈசனை நம்பாமற்போனால், தாருகா வனத்தில் கன்மாவை மட்டிலும் ஒப்புக்கொண்டு, ஈசனை ஒப்புக்கொள்ளாததாற் கடைசியிற் தடுமாறிக் கெட்டலைந்த மகரிஷிகளின் கதி கிடைக்குமென்பதையும் தெரிந்துகொண்டோம். இனிப் பிரகிருதத்தைத் தொடர்வாம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

# பக்தியின்பேதங்கள்

பக்தி யானது மூன்று வகை. அவை? இராகாத்மிகா பக்தி, அஹேதுகீ பக்தி, முக்யபக்தி.

இராகாத்மிகா பக்தியானது— ஸ்ரீ பகவான் பேரில் அனுராகம் கொண்டிருப்பது. அதிகப்பிரேமையே காரணம். ஸ்ரீகண்ணன் பேரில் கோபிகாஸ்திரீகள் வைத்திருந்த பக்திக்கு இராகாத்மிகாபக்தி என்று பெயர். நாம் புத்திரமித்ரகளத்ராதியர்களிடத் தேவைத்திருக்கும், பிரேமையை திருப்பி ஸர்வேச்வரனிடத்தில் வைப்பது.

அஹேதுகீ பக்தி—காரணமன்னியிலேயே செய்வது. எப்படி நதிகளெல்லாம் ஸ்வேச்சையாகவே ஸமுத்திரத்தை அடையுமோ, அதேமாதிரி பகவானிடத்தில் பக்தியைசெலுத்துவது. பிரஹ்லாதாழ்வாருடைய பக்தியை அஹேதுகீ பக்தி என்பார். முத்தியைக்கூடக்கருதாதுசெய்வது. இந்த பக்திக்கு முத்தியானது தாஸிஎன்கிறதற்கொப்பாவாம். எப்படி தாஸியானவள் கைகட்டி ஸர்வகாலமும் ஊழியம் செய்வதிலேயே கண்ணுகவிருப்பளோ அதேபிரகாரம் முத்தியானது இவ்வித அஹேதுகீபக்தியை அடைந்திருப்பவர்களிடத்தில் கார்த்துக்கொண்டிருக்கும். ஆகவே இந்த பக்திதான் மஹாசிலாக்கியமானபக்தி இதுஞானத்தையும் கூடக்கடந்து நின்று ஒளிர்வது. யாதொரு காரணமன்னியிலேயே எப்படி நதிகளெல்லாம் ஸமுத்திரத்தை நாடிச்சென்று இரண்டறக்கலந்து நிற்குமோ அதேவண்ணம் பகவானிடத்தில் இரண்டறக்கலந்து நிற்பதே அஹேதுகீபக்தி என்பார்.

இதையே முக்கிய பக்தி என்றும் சொல்வர். முறையே இம்மூன்றையும் கர்மம் உபாஸனே ஞானம் என்பதாகவும் சொல்லலாம்.

இது தவிர வைதீபக்தி ஸஹேதுகீ பக்தி கௌணீபக்தி என்றும், ஸாத்வீ இராஜஸீ தாமஸீபக்தி என்னும் ஆறுவகைப் படும்.

வைதீபக்தி— பகவத் விஷயங்களை பிறருக்கெடுத்து சொல்லுவதிலும் பிறர் சொல்லத்தாம் ஆனந்தமாகக்கேட்பதினுலும் பகவானுடைய கல்யாணகுணங்களைக்கேட்டுத்தெளிவது. இதனுல் இராகாத்மிகாபக்தியை அடையலாம்.

ஸஹேதுகீ பக்தி— அதாவது காரணத்தோடு பக்தியை செய்வது. சுகத்தையாவது தனத்தையாவது ஸர்வேச்வரன் அளிப்பார் என்பதாக நண்ணிச்செய்வது. இதிலிருந்தும் அஹேதுகிபக்தி உதயமாகக்கூடும். இதற்கு உதாஹரணம் துருவசரித்திரம்.

தாமஸீபக்தி— திருடர்கள் தனக்கு விசேஷத்திரவியம் கிடைத்தால் கோழிவெட்டிக்கும்பிடுகிறேன் என்பதாகப்பிரார்த்திப்பது. தாமஸீபக்தி, இராஜஸீபக்தி, போகபோக்கியங்களில் விருப்புற்று. புத்திரர்கள் உண்டாகவேண்டும் என்றும் தனக்கு விரோதம் செய்தவர்கள் ஒழிய வேண்டும் என்றும். பகவானைக்குறித்து பிரார்த்திப்பது. இராஜஸீ, பக்தி என்றுபெயர்.

ஸாத்விகபதி—விஷய போகங்களில் வெறுப்புற்று அற்பம் கூட ஆசையில்லாமல் முக்தியை அளிக்கும் பொருட்டுபகவானை ப்பிரார்த்திப்பது ஸாத்விகபக்தி என்று பெயர்.

இதில் ஆந்த்ரபக்தி பாஹ்யபக்தி என இருவகைத்தாகும் பகவானைத்தன்மனதில் திடமாகஸதாஸர்வகாலமும் இப்பேர் கொத்தவர் ஸர்வவியாபகர் மோக்ஷத்தை அளிப்பவர் பலதாதா ஜகத்பிதா அனந்தகல்யாண குணத்தை யுடையவர். என்று அநேகவிதமாக துதிசெய்து கொண்டிருப்பதற்கு ஆந்திர பக்தி என்று பெயர். பாஹ்யபக்தி— விக்கிர ஹாராதனையே பாஹ்யபக்திஎனப்படும். ஆகவே உத்தமமான மானிடஜென்மம் கிடைத்த ஒவ்வொருவரும் உத்தம மானதும், மோக்ஷத்தை அளிப்பதுமாகிய பக்தியைச்செய்து ஸ்ரீய:பதியாகிய பகவானுடைய பாதாரவிந்தங்களைச்சேர்வோமாக.

ஓம் தத்ஸத்.

வெங்கிடராம சாஸ்த்திரி